## 2018ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 12ம் நாள் வியாழக்கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

### முன்னிலை : திரு. வே. கிருஷ்ணகுமார், டி.சி.இ., நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ)

**பொருள் எண் : 1**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களின் கடிதத்தில் குடிநீர் விநியோகத்தில் வீட்டு குடிநீர் இணைப்புகள் (HSC) வழங்கப்பட்டிருப்பது மிகவும் குறைவாக உள்ளதால் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 21.03.2018 ஆய்வு கூட்டத்தில் ஜுலை 2018க்குள் ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு லட்சம் குடிநீர் இணைப்புகள் வழங்க மண்டல செயற் பொறியாளர்களுக்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தற்போது நகராட்சியில் இன்னும் 7000 எண்ணிக்கை குடிநீர் இணைப்புகள் வழங்கப்படவில்லை. எனவே 7000 எண்ணிக்கை குடிநீர் வீட்டு இணைப்புகளை நகராட்சி மூலமாக இணைப்புகள் வழங்கி அதற்கான ஏற்படும் செலவினத்தை வீட்டு உரிமையாளர்களிடமிருந்து தவணை முறை வசூல் செய்துக் கொள்ளவும் அதற்கான ஏற்படும் செலவின தொகை ரூ.233.00 லட்சத்திற்கு பிரேரணையினை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 2**

இந்நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ) அவர்களின் மார்ச் 2018ம் மாத நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

பதிவு செய்யலாம்

**பொருள் எண் : 3**

தருமபுரி நகராட்சியில் 33 வார்டுகளில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்க தேவைப்படும் நீர் வரத்து கட்டுபாட்டு கருவி Flow Controal Valve இருப்பு குறைவாக உள்ளதால் புதியதாக 500 எண்ணிக்கை வாங்கி வழங்க குழாய் ஆய்வர்கள் கோரியதால் மேற்கண்ட Flow Controal Valve அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.டி.எஸ்.ஜப்பார் மூலம் ரூ.3.20 லட்சம் மதிப்பீட்டில் வாங்கியமைக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 4**

இந்நகராட்சியில் பணிபுரியும் மின் பணியாளர்கள் மற்றும் குடிநீர் பணியாளர்கள் தங்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி வழங்க கோரியுள்ளார்கள். எனவே கீழ்கண்ட பாதுகாப்பு உபகரணங்கள் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. டி.எஸ். ஜப்பார் அவர்கள் மூலம் ரூ.1.10 லட்சம் மதிப்பீட்டில் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கியமைக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | Gloves | 10Nos | 2+8 | | 13. | Screw Driver 50mm | 2Nos | 2+- |
| 2. | Rain Coat | 16Nos | 2+14 | | 14. | Screw Driver 100mm | 2Nos | 2+- |
| 3. | Cutting Player | 8Nos | 2+6 | | 15. | Screw Driver 150mm | 2Nos | 2+- |
| 4. | Torch Light | 15Nos | 2+13 | | 16. | Screw Driver 200mm | 2Nos | 2+- |
| 5. | Spanner Set | 6Nos | -+6 | | 17. | Power Driling Machine | 1No | 1+- |
| 6. | Screw Driver 12” | 6Nos | -+6 | | 18. | Cable crimping Toal | 1No | 1+- |
| 7. | Screw Driver 8” | 6Nos | -+6 | | 19. | Ring Spaner 10mm to 32mm | 1No | 1+- |
| 8. | Tester | 8Nos | -+8 | | 20. | Double Hord Apanner 10mm to 32mm | 1No | 1+- |
| 9. | Meggor Test 500V | 1No | 1+- | | 21. | Pipe Ring 24” | 1No | 1+- |
| 10. | Clamp Meter | 1No | 1+- | | 22. | Chain Ring 36” | 1No | 1+- |
| 11. | Capacitance Meter | 1No | 1+- | | 23. | Nylan Ropc12RM | | 0+1 |
| 12. | Nose Plager 200mm | 2Nos | 2+- | | | | | |

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண் : 5**

தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட 33 வார்டுகளில் டெங்கு காய்ச்சல் பரவலாக உள்ளதால் 01.02.2018 முதல் 28.02.2018 வரை 28 நாட்களுக்கு தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் 22 பணியாளர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டு நாள் ஒன்றுக்கு மாவட்ட ஆட்சியரின் தரப்படுத்தப்பட்ட விலை விகிதம் அட்டவணையின் படி ஊதியம் ரூ.1,49,688/—ஐ வழங்கியதையும் பணி ஒதுக்கீடு செய்ததையும் மன்றத்தின் அனுமதிக்கு கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையின் அவசர நிலை கருதி பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியரின் தரப்படுத்தப்பட்ட விலை விகிதப்படி பணி ஒதுக்கீடு செய்யப்பட்டதையும் 28 நாட்களுக்கு ஊதியம் வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 6**

தருமபுரி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் TN29AM8303 லாரிக்கு தகுதி சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளதால் வாகனத்தின் பழுதினை சரி செய்யும் பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் விலைப்புள்ளி கோரியதில் 09.04.2018ம் தேதியில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | ஜோசப் ஆட்டோ கேரேஜ் | Rs.59,480/- |
| 2. | அஜ்மிர் ஆட்டோ கேரேஜ் | Rs.56,890/- |
| 3. | ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ் | Rs.52,700/- |

**அலுவலகக்குறிப்பு**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.3ல் கண்டுள்ள ஸ்ரீ வாரி மோட்டார் ஒர்க்ஸ், தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணிகள் மேற்கொண்டதையும் பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 7**

இந்நகராட்சிக்கு தேவையான தூய்மை இந்தியா திட்ட பணிகளுக்கான படிவங்கள் 4ம் வகுப்பு வரை படிக்கும் பள்ளி மாணவர்களுக்கான சுய உறுதி மொழி படிவம் **25000** எண்ணிக்கை, பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கான சுய உறுதி மொழி படிவம் **2000** எண்ணிக்கை, பணியாளர்களுக்கான உறுதி மொழி படிவம் **50** எண்ணிக்கை, சுய உதவி குழுக்களுக்கான உறுதி மொழி படிவம் **100** எண்ணிக்கை, முன்னாள் நகர் மன்ற உறுப்பினர்களுக்கான சுய உறுதி மொழி படிவம் **50** எண்ணிக்கை மற்றும் பைண்டிங் **150** எண்ணிக்கை ஆகியவற்றை தருமபுரி மாவட்ட அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்., தருமபுரி அவர்கள் மூலம் அச்சிட்டதற்கான செலவினத் தொகை **ரூ.36,640/–** வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 8**

தருமபுரி நகராட்சி உட்பட்ட 33 வார்டுகளிலும் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை கட்டணம் மற்றும் நகராட்சி கடைகள் வாடகை ஆகியவற்றினை வசூல் செய்திட ஒலி பெருக்கியுடன் கூடிய ஆட்டோ மூலம் விளம்பரம் செய்ய விலைப்புள்ளி கோரியதில் 08.02.2018ம் தேதியில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | ஒரு நாள் வாடகை தொகை |
|---|---|---|
| 1. | கே. ராஜசேகர் | Rs.1,650/- |
| 2. | எஸ். வடிவேல் | Rs.1,800/- |
| 3. | எஸ். கதிர்வேல் | Rs.1,850/- |

**அலுவலகக்குறிப்பு**

1. இப்பணிக்கான தோராய செலவினம் ரூ.1,30,000/– மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல் கண்டுள்ள கே.ராஜசேகர், தருமபுரி என்பவர் குறைவாக கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணிகள் மேற்கொண்டதையும் பட்டியல்படி தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 9**

இந்நகராட்சிக்கு **2018–2019** ஆம் நிதி ஆண்டுக்கு பொது ஏலங்கள், ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் இதர விளம்பரங்கள் விதிமுறைகளுக்குட்பட்டு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்வதற்கும், அதற்கான கட்டணத் தொகையை சம்மந்தப்பட்ட நாளிதழ்களுக்கு வழங்கவும், அதற்கான தோராய செலவுத் தொகை **ரூ.5,00,000/–க்கு** மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் இதர விளம்பரங்கள் விதிமுறைகளின்படி மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் மூலமாக தினசரி நாளிதழில் விளம்பரம் செய்வதற்கும் விளம்பர கட்டணம் தினசரி நாளிதழ்களுக்கு விதிமுறைகளின்படி வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண் : 10**

2018–2019 ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்குத் தேவையான எழுது பொருட்கள், படிவங்கள், பதிவேடுகள், கணினி டோனர்களை மாவட்ட கூட்டுறவு அச்சக சேவை சங்கம் மூலம் வாங்கிக் கொள்ளவும், அச்சடித்துக் கொள்ளவும் தோராய செலவினம் ரூ.10.00 (பத்து லட்சம்) மட்டும் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

இச்செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 11**

இந்நகராட்சியின் மீது வழக்குகள் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அமர்வு நீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் தொழிலாளர்கள் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்படுகின்றன. வழக்கறிஞர் தொடர் கட்டணம் மற்றும் வழக்குகளுக்கான கட்டணம் ஒவ்வொரு வழக்குகளுக்கும் அனுமதி பெற்று வழங்க காலதாமதம் ஏற்படுவதால் 2018–2019ஆம் ஆண்டுக்கு வழக்கறிஞர்களுக்கு வழக்கு கட்டணம் வழங்க ஆகும் தோராய செலவினம் ரூ.5,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 12**

இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் பணியாளர்கள் அலுவலகப்பணி காரணமாக வெளியூர்களுக்கு பயணம் மேற்கொள்கிறார்கள். இத்தகைய பயணங்களுக்கு அரசு விதிகளின்படி பயணப்படிகள் வழங்கப்படுகிறது. எனவே 2018–2019ஆம் ஆண்டில் நகராட்சி பணியாளர்களுக்கு பயணப்பட்டியல்களின்படி பயணப்படிகள் வழங்கவும், மாறுதல் பயணப்படிகள் வழங்கவும், இதற்காக தோராய செலவுத்தொகை ரூ.3,00,000/–க்கும், குடிநீர் விநியோகப்பிரிவு பணியாளர்களுக்கு தொகை வழங்க தோராய செலவு ரூ.75,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு**

அரசு விதிகளின்படி சமர்ப்பிக்கப்படும் பயணப்பட்டியல்களுக்கு உரிய தொகை வழங்கவும், 2018–2019 ஆம் நிதி ஆண்டுக்கு தோராய செலவு ரூ.3,00,000/– மற்றும் ரூ.75,000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 13**

இந்நகராட்சியின் ஆண்டு உரிம இனங்கள் ஏலதாரர்களிடம் பிடித்தம் செய்யப்படும் சேவைவரி மற்றும் நகராட்சி கடை வாடகைக்கு குத்தகைதாரர்கள் செலுத்தப்படும் சேவைவரி தொகைக்கு உண்டான விபர அறிக்கை தாக்கல் செய்யவும் , ஆண்டு உரிம இனங்களுக்கு செலுத்த வேண்டிய சேவைவரிக்கு மேல்முறையீடு செய்துள்ளமைக்கு உண்டான விவர அறிக்கை தொடர்பாக திரு.கண்ணப்பன் அட்வகேட், சேலம் அவர்கள் மூலம் தாக்கல் செய்யவும், 2018–2019ஆம் ஆண்டுக்கான தோராய செலவினம் ரூ.30,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 14**

இந்நகராட்சியின் ஆண்டு உரிம இனங்கள் ஏலதாரர்களிடம் பிடித்தம் செய்யப்படும் GST மற்றும் நகராட்சி கடை வாடகைக்கு குத்தகைதாரர்கள் செலுத்தப்படும் GST தொகைக்கு உண்டான விபர அறிக்கைகள் திரு.கே.ஜி.முருகன், கண்காணிப்பாளர் (ஓய்வு) தருமபுரி அவர்கள் மூலம் தாக்கல் செய்யவும், 2018–2019ஆம் ஆண்டுக்கான தோராய செலவினம் ரூ.30,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 15**

இந்நகராட்சியின் ஒப்பந்ததாரர்கள், ஆண்டு உரிம இனங்கள் ஏலதாரர்கள் மற்றும் அலுவலர்கள் இடம் பிடித்தம் செய்யப்படும் வருமானவரி தொகைக்கு வருமானவரி விபர அறிக்கை காவேரி கன்சல்டன்சி சர்வீசஸ், திரு.எஸ்.நடராஜன் சேலம் அவர்கள் மூலம் தாக்கல் செய்யவும், 2017–2018 மற்றும் 2018–2019ஆம் ஆண்டுக்கான தோராய செலவினம் ரூ.30,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 16**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 19 வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த Desilting இரண்டு எண்ணிக்கை ஆட்டோ TN29AM6702, TN29AM6715 வாகனம் வாங்கப்பட்டு பாதாள சாக்கடை அடைப்புகளை சரி செய்யப்பட்டு வந்தது. தற்போது மேற்கண்ட வாகனத்தினை பழுது நீக்கம் செய்யப்பட வேண்டியதால் 31.07.2017 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளியினை கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. **TN29AM6702**

| | | |
|---|---|---|
| 1. | Lakshmi Augo Diesel Works Mettur | 1,59,965 |
| 2. | Sri Jothi Murugan Motr works Salem | 1,78,340 |
| 3. | JVK Auto Diesel work Salem | 2,10,860 |

2. **TN29AM6715**

| | | |
|---|---|---|
| 1. | Lakshmi Augo Diesel Works Mettur | 1,59,965 |
| 2. | Sri Jothi Murugan Motor works Salem | 1,78,340 |
| 3. | JVK Auto Diesel work Salem | 2,10,860 |

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்கண்ட வரிசை எண் 1ல் 1ம், 2ல் 1ம் கண்ட குறைந்த விலைப்புள்ளியினை அளித்துள்ள Lakshmi Augo Diesel Works Mettur நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 17**

இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து ஓய்வு பெறும்போது விதிகளின் படி இருப்பில் உள்ள விடுப்புக்கான ஊதியம் வழங்கும் போது எதிர்வரும் தணிக்கை தடைகளுக்கு தோராயமாக தொகை பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. தற்போது தணிக்கை 2016–2017ம் ஆண்டு வரை முடிவுற்றதாலும் இப்பணியாளர் மீது தணிக்கை தடை ஏதும் நிலுவை இல்லை என்பதாலும் கீழ்கண்ட பணியாளர்களின் தொகை காலங்கடந்தவையாக உள்ளதால் தொகை வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | திருமதி. த.காஞ்சனா க/பெ. தமிழரசன், 30.06.2013ல் ஓய்வு | ரூ.10,000 |
| 2. | திரு.சி.ராஜி த/பெ. சின்னசாமி. து.ப. 30.06.2013 ஓய்வு | ரூ.10,000 |
| 3. | ஆர்.சின்னசாமி த/பெ. இராமன், து.ப. 31.07.2013 | ரூ.10,000 |
| 4. | முனியப்பன் த/பெ. இராமசாமி, 06.11.2013ல் இறப்பு | ரூ.10,000 |
| 5. | மா.ராஜேஸ்வரி க/பெ. மாது, 21.09.2010ல் இறப்பு | ரூ.15,000 |
| 6. | சி. எல்லம்மாள் க/பெ. சின்னசாமி, 30.06.2015 ஓய்வு | ரூ.10,000 |
| 7. | கே.மணிமேகலை, ம.க. 31.03.2015 ஓய்வு | ரூ.10,000 |
| 8. | கோவிந்தம்மாள் க/பெ. ராஜீ 30.06.2015 ஓய்வு | ரூ.10,000 |
| 9. | மாரியம்மாள் க/பெ. (லேட்) மாரிமுத்து இறப்பு | ரூ.10,000 |

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 18**

தருமபுரி நகராட்சி அலுவலக கட்டிடத்தின் தரைதளத்தில் பொதுப்பிரிவு செயல்பட்டு வருகின்றது. நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர் ஆய்வுக்கு வரும் போது பொதுப் பிரிவினை ஆய்வு செய்து பிரிவு எழுத்தர்கள், மேலாளர், கணக்கர், தட்டச்சர், பதிவறை எழுத்தர் அவர்களுக்கு தனித்தனியான அறைகள் அமைத்து தருமாறு நேரடியாக தெரிவித்ததால் பொதுப் பிரிவில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தனித்தனியான அறைகள் அமைத்து கொடுக்க ஏற்படும் செலவின தொகை ரூ.7.00 லட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 19**

இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவு, பொதுப் பிரிவு, பொறியாளர் பிரிவு, தெருவிளக்கு பிரிவு, குடிநீர் பிரிவில் பணிப்புரியும் பணியாளர்களுக்கு 2018–2019ம் ஆண்டுக்கு இரு சக்கர வாகன முன்பணம் மற்றும் கணினி முன்பணம் வழங்க வேண்டியிருப்பதால் ரூ.10.00 லட்சம் தோராய செலவினம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் : 20**

நகராட்சி நிர்வாக ஆணையர் சேப்பாக்கம் சென்னை அவர்கள் அலுவலக ஆய்வு கூட்ட நாள் 21.03.2018ல் நகராட்சிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கு 100 சதவீதம் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

தருமபுரி நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் உள்ள வீடுகளுக்கு நிலுவை இன்றி புதிய குடிநீர் இணைப்புகள் வழங்கவும் அதற்கான முன்வைப்பு தொகை மற்றும் இதர கட்டணங்கள் தவணை முறையில் செலுத்த பொது மக்களுக்கு துண்டு பிரசுரங்கள், 10 எண்ணிக்கை விளம்பர பதகைகள் வைக்கவும், தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் மற்றும் உள்ளூர் தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பு செய்யவும் ஏற்படும் தோராய செலவினம் ரூ.1.50 லட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கு.

தனி அலுவலர்
மற்றும் ஆணையாளர் (பொ)
தருமபுரி நகராட்சி.

**2018ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 12ம் நாள் வியாழக்கிழமை தருமபுரி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட தீர்மான நகல்**

| **பொருள் எண்கள்** | **தீர்மான எண்கள்** | **நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம்** |
|---|---|---|
| பொருள் : 1 | 400 | அனுமதிக்கப்பட்டது |
| பொருள் : 2 முதல் 4 வரை | 401 முதல் 403 வரை | பதிவு செய்யப்பட்டது |
| பொருள் : 5 முதல் 20 வரை | 404 முதல் 419 வரை | அனுமதிக்கப்பட்டது |

தனிஅலுவலர்(ம) ஆணையாளர்(பொ)
தருமபுரி நகராட்சி.